**செ. கு. எண்**:221 **நாள்**:01.12.2011

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 1.12.2011</u>

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற புரளியை கேரள மக்களிடையே கிளப்பி, புதிய அணை கட்டப்பட வேண்டும் என்ற நியாயமற்ற கோரிக்கையை அரசியல் ஆதாயத்திற்காக கேரள அரசு தொடர்ந்து பிடிவாதமாக வலியுறுத்தி வருகிறது.

முல்லைப் பெரியாறு பிரச்சனை குறித்த வழக்கை தீர விசாரித்த உச்ச நீதிமன்றம், வல்லுநர் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், முல்லை பெரியாறு அணை பாதுகாப்பானது தான் என்றும், எனவே அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும், ஆய்வுக்குப் பிறகு அணையின் நீர்மட்டத்தை மேலும் படிப்படியாக 152 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் 2006 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது.

ஆனால், உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு சற்றும் மதிப்பளிக்காமல், அதனை செயல்படுத்தாமல் இருக்கும் வகையில், 18.3.2006 அன்று கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்ப் பாதுகாப்பு திருத்தச் சட்டத்தினை கேரள அரசு கொண்டு வந்தது. இதனை எதிர்த்து எனது தலைமையிலான தமிழக அரசால் உடனடியாக 27.3.2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், அணையின் பாதுகாப்பு குறித்து ஆராய அதிகாரக் குழு (Empowered Committee) ஒன்றை உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள நிலையில், கேரள அரசு புதிய அணை கட்டப்பட வேண்டும் என்பதை பல்வேறு வழிகளில் வலியுறுத்தி வருகிறது. இது மட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணை குறித்து கேரள மக்களிடம் ஓர் அச்ச உணர்வை கேரள அரசு மற்றும் கேரள மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகள் ஏற்படுத்தி வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாக புதிய அணை கட்டும் முயற்சியை கைவிடவும், உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தவும் கேரள அரசுக்கு அறிவுரை வழங்க வேண்டும் என்று நான் பாரதப் பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளேன்.

இருப்பினும், கேரள அரசு இந்தப் பிரச்சனையை தொடர்ந்து பெரிதுபடுத்திக் கொண்டிருப்பதால், டாக்டர் மு. தம்பிதுரை, எம்.பி. அவர்கள் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாரதப் பிரதமர் அவர்களை நாளை (2.12.2011) காலை 11.30 மணிக்கு நேரில் சந்தித்து முல்லைப் பெரியாறு குறித்த கோரிக்கை மனுவை சமர்ப்பிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**